கருமத்தம்பட்டி நகராட்சியில் 09.09.2025ம் நாள் நடைபெற்ற மன்றக்கூட்டத்தின் தீர்மான நகல்கள்.

**பொருள் எண்.01**

கருமத்தம்பட்டி நகராட்சி - பொது சுகாதாரப்பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் திடக்கழிவுகளில் சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூரில் உள்ள ULTRA-TEC அல்லது DALMIA சிமெண்ட் தொழிற்சாலைக்கு உப எரிபொருளாக அனுப்பி வைக்க வாடகை லாரிகளை பயன்படுத்திக் கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் இந்நகர் மன்ற தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு (தீர்மானஎண்;473/09.07.2024 860/2025 02.07.2025) பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி செலவினத் தொகை வாகன வாடகைக்கு செலவிடப்பட்டதை தொடர்ந்து, தூய்மை பணியின் அவசியம் கருதி திடக்கழிவுகளில் சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை உப எரிபொருளாக அனுப்பி வைக்க உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.968**

**மன்றம் அனுமதி வழங்குகிறது.**

**பொருள் எண்.02**

கருமத்தம்பட்டி நகராட்சி - பொது சுகாதாரப்பிரிவு . நகராட்சியின் JCB வாகனம் மற்றும் கழிவு நீர் உறிஞ்சும் வாகனங்களுக்கு வெளிக்கொணர்வு முகமை ஒப்பந்தம் மூலம் இரண்டு ஓட்டுனர்கள் மற்றும் இரண்டு மஸ்தூர் பணியாளர்கள் நியமனம் செய்து பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் இந்நகர் மன்ற தீர்மானத்தில் (தீர்மானஎண்;682/18.10.2024) அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணியினை மேற்கொள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமதி.ஸ்ரீதேவி காரணம் பேட்டை ஒப்பந்ததாரர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த காலம் 20.10.2025 ம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ஓராண்டுக்கு ரூ.10.00 லட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**ந.க.எண். 1838/2024//எச்1**

**அலுவலக குறிப்பு**

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

<u>தீர்மானம் எண்.969</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கிறது. மறு ஒப்பந்தம் கோரும் வரை ஏற்கனவே உள்ள நிறுவனத்தை பணி மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்.03**

கருமத்தம்பட்டி நகராட்சி - பொது சுகாதாரப்பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் திடக்கழிவுகளில் சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூரில் உள்ள ULTRA-TEC அல்லது DALMIA சிமெண்ட் தொழிற்சாலைக்கு உப எரிபொருளாக அனுப்பி வைக்க வெளிக்கொணர்வு முகமை ஒப்பந்தம் மூலம் வாடகை லாரிகளை பயன்படுத்திக் கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் இந்நகர் மன்ற தீர்மானத்தில் (தீர்மான எண் 473/2024- நாள்;09.07.2024 மற்றும் 594/2024 - நாள்:18.10.2024) அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணியினை மேற்கொள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஸ்ரீசிவசக்தி பில்டர்ஸ் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த காலம் 20.10.2025 ம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ஓராண்டுக்கு ரூ.10.00 லட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது

<u>ந.க.எண். 1300/2024//எச்1</u>

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

<u>தீர்மானம் எண்.970</u>

மன்றம் அனுமதி அளிக்கிறது. மறு ஒப்பந்தம் கோரும் வரை ஏற்கனவே உள்ள நிறுவனமே பணி மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்.04**

கருமத்தம்பட்டி நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்த திரு.கணேசன் 30.06.2025 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார்.அன்னாருக்கு தமிழ்நாடு அரசு சிறப்பு சேமநல நிதி 1984 திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு 31.12.1990 முதல் மாதம் ரூ.20/- வீதம் சிறப்பு சேமநல நிதிக்கான சந்தா தொகைகள் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. திரு.கணேசன் துப்புரவு பணியாளரின் 28.06.2025 நாளிட்ட விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி பணி ஓய்வு பெற்ற திரு.கணேசன் என்பவருக்கு அரசாணை எண் 136 நிதி (ஓய்வூதியம்)துறை நாள் - 29.2.1984 ன் படி சிறப்பு சேமநல நிதியின் அரசு மான்யத் தொகையாக ரூ.10,000/ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.971</u>**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.05**

கருமத்தம்பட்டி நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்த திருமதி.வள்ளி தெய்வானை 21.05.2025 அன்று பணியிடையில் காலமானார். அன்னாருக்கு தமிழ்நாடு அரசு சிறப்பு சேமநல நிதி 2000 திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு 25.09.2013 முதல் மாதம் ரூ.70/- வீதம் சிறப்பு சேமநல நிதிக்கான சந்தா தொகைகள் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. திருமதி.வள்ளி தெய்வானை என்பவரின் கணவரும் வாரிசுமான திரு.ராஜன்என்பவரின் விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி காலஞ்சென்ற திருமதி.வள்ளிதெய்வானை என்பவரின் வாரிசும் கணவருமான திரு.ராஜன் என்பவருக்கு அரசாணை எண் 504 நிதி (ஓய்வூதியம்)துறை நாள் -02.11.2000 ன் படி சிறப்பு சேமநல நிதியின் அரசு மான்யத் தொகையாக ரூ.10,000/ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.972</u>**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**பொருள் எண்.06**

கருமத்தம்பட்டி நகராட்சி பகுதியில் சாலையோர வியாபாரம் செய்யும் வியாபாரிகளின் நலனுக்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7366/2016/UPA2 நாள். 03.09.2018ன் படி விற்பனை செய்யும் பகுதிகள் மற்றும் விற்பனை செய்யக்கூடாத பகுதிகளை கண்டறியப்பட்டு நகர் விற்பனை குழு மூலம் 22.08.2025 அன்று நடைபெற்ற மாதந்திர கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பட்டது.மேலும் சாலையோர வியாபாரம் செய்ய விற்பனை கட்டணம் வசூல் செய்ய கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது.மேற்கண்ட விற்பனை இடங்கள் விபரம் மற்றும் கட்டண விபரங்கள் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**பொருள் எண்-1**

வியாபார பகுதி ( Vending Zone) வரையறுக்கப்பட்ட வியாபார பகுதி (Non <u>Vending Zone</u>) முதலியவை நகர வியபாரக்குழுவில் விவாதிக்கப்படு முடிவு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு நகர வியாபார குழுவால் பதிவுசெய்யப்பட்டது.

I. வரையறுக்கப்பட்ட வியாபார பகுதி <u>(Restricted Vending Zone)</u>

| வ எண் | வியாபார பகுதி (Vending Zone) | வார்டு |
|---|---|---|
| 1 | சோமனூர் மெயின் ரோடு | 23,26 |
| 2 | பவர்ஹவுஸ் ரோடு | 19,20 |
| 3 | நொய்யல் ஆறு அருகில் | 22,26 |
| 4 | மேம்பாலத்திற் கிழ் | 24 |
| 5 | சென்னியாண்டவர் கோவில் அருகில் | 02,03 |
| 6 | இரயில்வே ரோடு எதிர்புறம் உள்ள சேடபாளையம் ரோடு | 14,21 |

II.தடை செய்யப்பட்ட வியாபார பகுதி (Non Vending Zone)

| வ எண் | வியாபார பகுதி(Non Vending Zone) | வார்டு |
|---|---|---|
| 1 | மில் ரோடு | 25 |
| 2 | இரயில்வே சார்விஸ் ரோடு | 20 |
| 3 | கிருஷ்ணாபுரம் பேருந்து நிலையம் | 12 |
| 4 | சார் பதிவாளர் அலுவலகம் முன்பு (பழைய நகராட்சி அலுவலக ரோடு) | 26 |
| 5 | கருமத்தம்பட்டி நால் ரோடு (National highway junction) | 10 |
| 6 | சோமனூர் பேருந்து நிலையம் எதிர்புறம் | 26 |
| 7 | காவல் நிலையம் ரோடு | 17 |

**பொருள் எண் 2**

**கட்டணங்கள் ,வரிகள் மற்றும் அபராதம்**

விற்பனை கட்டணம் :

1) சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும் .

2 ) உப விதி (1)ன் படியான விற்பனை கட்டணம் கீழ்காணும் பட்டியிலின் படியாகும்

**வியாபார கட்டணம் விவரம்**

| வ எண் | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1 | நிலையான விற்பனையாளடர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டு மதிப்பில் 1 சதவீதம்- வருடத்திற்கு ரூ.750/- க்கு குறையாமல் |

| | | | |
|---|---|---|---|
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டு மதிப்பில் 2 சதவீதம்- வருடத்திற்கு ரூ.1500/- க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டு மதிப்பில் 3 சதவீதம்- வருடத்திற்கு ரூ.3000/- க்கு குறையாமல் |
| 2 | நிலையான விற்பனையாளடர்(பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு ) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டு மதிப்பில் 0,5 சதவீதம்- வருடத்திற்கு ரூ.375/- க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டு மதிப்பில் 1 சதவீதம்- வருடத்திற்கு ரூ.750/- க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டு மதிப்பில் 1.5 சதவீதம்- வருடத்திற்கு ரூ.1500- க்கு குறையாமல் |
| 3 | நடமாடும் விற்பனையாளர்கள் ( மோட்டார் பொருத்தப்பட்ட வண்டி யுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ,750/- |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ,1500/- |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ,3000/- |
| 4 | நடமாடும் விற்பனையாளர்கள் ( மோட்டார் பொருத்தப்படாத வண்டி யுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ,375/- |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ,750/- |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ,1500/- |
| 5 | நடமாடும் விற்பனையாளர்கள் ( தலைசுமை) | - | வருடத்திற்கு ரூ,250/- |

உரிய விதிகளின் கீழ் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை கட்டணம் அளவிற்கு ஏற்றார்போல் நிர்ணயிக்கப்படும்.மேற்படி நிர்ணயிக்கப்பட்ட வியாபார கட்டணத்தை நகராட்சியில் செலுத்தி வியாபார சான்று பெற விண்ணப்பிக்க பட வேண்டும் என்பதனை நகர் விற்பனைக்குழுவால் பதிவு செய்யப்பட்டது.மேற்காண் கட்டண நடைமுறை 01/09/2025முதல் அமல்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.973</u>**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.07**

2024-2025 ஆம் ஆண்டிற்கு வருமானவரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி பிடித்தம் உரிய தலைப்பில் செலுத்திய வகையில் ரூ.51500/- பட்டியல் திரு.பி.சண்முகசுந்தரம் S.S. & co Auditors பொள்ளாச்சி என்பவரிடமிருந்து வரப்பெற்றுள்ளது பொதுநிதியிலிருந்து தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.974</u>**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.08**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 சென்னியாண்டவர் கோவில் 4வது வீதியில் மழைநீர் வடிகால் இல்லாததால் மழைநீர் சாலைகளில் தேங்கி பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.7.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.975</u>**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.09**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 சோமனூர் பேருந்து நிலையம் எதிரில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்படி பகுதியில்

உள்ள சிமென்ட் கான்கிரீட் சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.15.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

<u>**தீர்மானம் எண்.976**</u>

**மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண்.10**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 அரிமா சங்க வீதியில் உள்ள பேவர் பிளாக் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்படி பகுதியில் புதியதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.42.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

<u>**தீர்மானம் எண்.977**</u>

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**பொருள் எண்.11**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 சேரன் ரெசிடென்சி வடக்கு 3வது குறுக்கு ரோடு, சேரன் ரெசிடென்சி வடக்கு 4வது குறுக்கு ரோடு, சேரன் ரெசிடென்சி வடக்கு 5வது குறுக்கு ரோடு, சேரன்ரெசிடென்சி தெற்கு முதல் குறுக்கு ரோடு, சேரன்ரெசிடென்சி தெற்கு 2வது குறுக்கு ரோடு, சேரன்ரெசிடென்சி தெற்கு 3வது குறுக்கு ரோடு, சேரன்ரெசிடென்சி தெற்கு 4வது குறுக்கு ரோடு மற்றும் 5 வது குறுக்கு ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்படி பகுதிகளில் உள்ள தார்சாலைகளை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.55.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

<u>**தீர்மானம் எண்.978**</u>

**மன்றம் அனுமதி வழங்குகிறது.**

பொருள் எண்.12

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 ஆதி பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

<u>தீர்மானம் எண்.979</u>

மன்றம் அனுமதி வழங்குகிறது.

பொருள் எண்.13

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 சரோஜினி வீதி, சம்பத் வீதி, நாயக்கர் வீதி, ராஜ் வீடு அருகில், ஆறுமுகம் மேஸ்த்திரி வீடு கட் மற்றும் மாணிக்கம் வீடு அருகில் உள்ள கட் ரோடு ஆகிய பகுதிகளில் புதியதாக சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.38.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

<u>தீர்மானம் எண்.980</u>

மன்றம் அனுமதி வழங்குகிறது.

பொருள் எண்.14

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 ஆத்துப்பாளையம் பெருமாள் கோவில் வீதியில் தார்சாலை பழுதடைந்துள்ளது. மேற்படி பகுதியில் உள்ள தார்சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.31.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

<u>தீர்மானம் எண்.981</u>

மன்றம் அனுமதி வழங்குகிறது.

பொருள் எண்.15

கருமத்தம்பட்டி நகராட்சி - பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பை கழிவுகளை சேகரம் செய்யும் பணியினை மேற்கொள்ள திருவாளர் ரீ கம்போஸ் ரீ சைக்கிளிங் கோயம்புத்தூர் தனியார் ஒப்பந்ததாரர் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி 01.08.2025 முதல் தூய்மைபணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது .

இந்நிலையில் மேற்படி நிறுவனத்தில் பணிபுரியும் 10 பணியாளர்கள் கருமத்தம்பட்டி நகராட்சியின் MCC வளாகத்தில் தங்கி பணிபுரியவும் அதற்குண்டான வாடகை மற்றும் மின் கட்டணங்களை நகராட்சிக்கு செலுத்தி விடுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.1

மேற்படி பணியாளர்கள் MCC வளாகத்தில் தங்கி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.982</u>**

**ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதால் பின்னர் முடிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

கருமத்தம்பட்டி நகராட்சியில் புதிய ஆதார் சேவை மையம் அமைக்கும் பணியை ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு 14.08.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | தி/வா.புளூ நெஸ்ட் சர்வீஸ், கோவை | மதிப்பீட்டினை விட 0.01% குறைவு |
| 2 | தி/வா. ஏ.பி.எலக்ட்ரிக்கல்ஸ், கோவை | மதிப்பீட்டினை விட 0.59% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/வா.புளூ நெஸ்ட் சர்வீஸ், கோவை (மதிப்பீட்டினை விட 0.01% குறைவாக) என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.983</u>**

**மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண்.17**

கருமத்தம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பழைய அலுவலகத்தை சுற்றி தனியாக சுற்றுசுவர் அமைக்கும் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 14.08.2025 ஆம் தேதியில்

ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | தி/வா.புளு நெஸ்ட் சர்வீஸ், கோவை | மதிப்பீட்டினை விட 0.002% குறைவு |
| 2 | தி/வா. ஏ.பி.எலக்ட்ரிக்கல்ஸ், கோவை | மதிப்பீட்டினை விட 1.25% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/வா.புளு நெஸ்ட் சர்வீஸ், கோவை (மதிப்பீட்டினை விட 0.002% குறைவாக) என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.984</u>**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.18**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.14 இந்திரா காலனி பகுதியில் சமுதாய கழிப்பிடம் பராமரிப்பு பணிக்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு 14.08.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | தி/வா. ஸ்ரீ தேவி, காரணம்பேட்டை | மதிப்பீட்டினை விட 0.04% குறைவு |
| 2 | தி/வா. சம்பத் குமார், காடம்பாடி | மதிப்பீட்டினை விட 9.52% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/வா. ஸ்ரீ தேவி, காரணம்பேட்டை (மதிப்பீட்டினை விட 0.04% குறைவாக) என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண்.985

மன்றம் அனுமதி வழங்குகிறது.

பொருள் எண்.19

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 வீரப்ப கவுண்டர் சாலை பகுதியில் தார்சாலை பழுதடைந்துள்ளது. மேற்படி பகுதியில் உள்ள தார்சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.63.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண்.986

மன்றம் அனுமதி வழங்குகிறது.

பொருள் எண்.20

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 ஆத்துமேடு பகுதியில் உள்ள மேல்நிலைதொட்டியின் படிகட்டுகள் உடைந்து சேதமடைந்துள்ளது. எனவே மேற்படி சேதமடைந்த படிக்கட்டுகளை சீரமைக்கவும், மேலும் மேல்நிலை தொட்டியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.4.70 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண்.987

மன்றம் அனுமதி வழங்குகிறது.

பொருள் எண்.21

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 செந்தில் நகர் பகுதியில் உள்ள 3.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டி சேதமடைந்துள்ளது. மேற்படி சேதமடைந்துள்ளதை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.988**

**மன்றம் அனுமதி வழங்குகிறது.**

**பொருள் எண்.22**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 தீரன்சின்ன மலை நகர் பகுதியில் உள்ள இரண்டு மேல்நிலைத்தொட்டிகள் சேதமடைந்துள்ளது. மேற்படி சேதமடைந்துள்ள மேல்நிலைத்தொட்டிகளை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.989**

**மன்றம் அனுமதி வழங்குகிறது.**

**பொருள் எண்.23**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் குடிநீர் கட்டணம் வசூல் பணியினை துரிதப்படுத்திடவும் 100% வசூல் செய்திடுமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் 11.03.2025 ல் நடத்தப்பட்ட காணொளி ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, வசூல் பணியினை துரிதப்படுத்திட ஏதுவாக ஆட்டோ ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு வரி செலுத்திட தெரிவித்து 15 நாட்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டமைக்கு ஸ்ரீ சௌடேஸ்வரி பப்ளிசிட்டி, சோமனூர் அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.3,300/- வீதம் 15 நாட்களுக்கு ரூ.49,500/- தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.990**

**மன்றம் அனுமதி வழங்குகிறது.**

**பொருள் எண்.24**

கருமத்தம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஏலம் போகாத கடைகள் மற்றும் குத்தகை இனங்களுக்கான பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியானது 07.08.2025 அன்று

நடைபெற்றதில் ஏலம் கோரப்பட்ட ஏலக்கேள்விகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விபரம் கீழ்கண்டவாறு:-

| வரிசை எண் | கடையின் விபரம் | ஏலம்கோரியவர்/ ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டவர் பெயர் | உட்சபட்ச ஏலகேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 | புதிய வணிக வளாக கடை எண்.2 | ஆர்.தங்கராஜ் | ரூ.12,330/- |
| 2 | புதிய வணிக வளாக கடை எண்.2 | பிரேம்குமார் | ரூ.12,430/- |
| 3 | புதிய வணிக வளாக கடை எண்.2 | கிருஷ்ணவேணி | ரூ.13,500/- |
| 4 | புதிய வணிக வளாக கடை எண்.10 | ஆர்.தங்கராஜ் | ரூ.12,380/- |
| 5 | புதிய வணிக வளாக கடை எண்.10 | பிரேம்குமார் | ரூ.12,280/- |
| 6 | புதிய வணிக வளாக கடை எண்.10 | கிருஷ்ணவேணி | ரூ.12,000/- |

புதிய வணிக வளாக கடை எண்.2 க்கு அதிகபட்ச ஏலத்தொகை கோரிய வரிசை எண்.3 உள்ள திருமதி.கிருஷ்ணவேணி மற்றும் புதிய வணிக வளாக கடை எண்.10 க்கு அதிகபட்ச ஏலத்தொகை தொகை கோரிய வரிசை எண்.4 ல் உள்ள திரு.ஆர்.தங்கராஜ் அவர்களுக்கு நகராட்சி ஏலவிதிகளின் படி 01.09.2025 முதல் 31.08.2028 வரை மூன்று ஆண்டு காலத்திற்கு கடைகளை அனுபவித்துக்கொள்ளும் உரிமம் வழங்கவும், ஓராண்டு வாடகை தொகையை முன்வைப்புத்தொகையாக பெற்றுக்கொண்டு கடை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.991</u>**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

பொருள் எண்.25

கருமத்தம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஏலம் போகாத கடைகள் மற்றும் குத்தகை இனங்களுக்கான பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியானது 21.08.2025 அன்று நடைபெற்றதில் ஏலம் கோரப்பட்ட ஏலக்கேள்விகள் விபரம் கீழ்கண்டவாறு:-

| வரிசை எண் | கடையின் விபரம் | ஏலம்கோரியவர் பெயர் | உட்சபட்ச ஏலகேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 | சோமனூர் பேருந்து நிலைய முன்புறமுள்ள வணிக வளாக கடை எண்.4 | கே.மணி | ரூ.26,020/- |
| 2 | சோமனூர் பேருந்து நிலைய முன்புறமுள்ள வணிக வளாக கடை எண்.4 | ராஜேந்திரன் | ரூ.26,100/- |

சோமனூர் பேருந்து நிலைய முன்புறமுள்ள வணிக வளாக கடை எண்.4 க்கு அதிகபட்ச ஏலத்தொகை கோரிய வரிசை எண்.2 உள்ள திரு.ராஜேந்திரன் அவர்களுக்கு நகராட்சி ஏலவிதிகளின் படி 01.09.2025 முதல் 31.08.2028 வரை மூன்று ஆண்டு காலத்திற்கு கடைகளை அனுபவித்துக்கொள்ளும் உரிமம் வழங்கவும், ஓராண்டு வாடகை தொகையை முன்வைப்புத்தொகையாக பெற்றுக்கொண்டு கடை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

<u>தீர்மானம் எண்.992</u>

மன்றம் அனுமதி அளிக்கிறது.

பொருள் எண்.26

கருமத்தம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய வணிக வளாக கடை எண்கள்.1, 3, 4, 5, 6, 7, 8, 9, 11, 12, 13, 14 ஆகியவற்றிற்கான முதலாம் மூன்றாண்டு குத்தகை காலமானது 31.07.2025 உடன் முடிவுற்றது. மேற்படி கடைகளுக்கு நகராட்சி ஏலவிதிகளின் படி தற்போது செலுத்தி வரும் வாடகை தொகையிலிருந்து 15% வாடகை தொகையை உயர்வு செய்து புதுப்பித்து வழங்க புதுப்பித்தல் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை வித்தியாசத்தொகை செலுத்திய ஏலத்தாரர்களின் விபரம் கீழ்கண்டவாறு:-

| வரிசை எண் | கடை எண் | ஏலதாரர் பெயர் | தற்போது உள்ள வாடகைத் தொகை(ரூ) | புதிதாக நிர்ணயம் செய்யப்படும் வாடகைத் தொகை (15% உயர்வு செய்து)(ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 1 | திரு.ராஜேஷ்குமார் | 10200 | 11730 |
| 2 | 3 | திரு.தீபா | 10350 | 11902 |
| 3 | 4 | திரு.வடிவேல் | 10440 | 12006 |
| 4 | 5 | திரு.ஆர்.வி.பேச்சியண்ணன் | 11000 | 12650 |
| 5 | 6 | திரு.வி.குணசேகரன் | 10050 | 11557 |
| 6 | 7 | திரு.நடராஜமூர்த்தி | 10100 | 11615 |
| 7 | 8 | திருமதி.கலைவாணி | 10400 | 11960 |
| 8 | 9 | திரு.ஆர்.கிருஷ்ணசாமி | 10100 | 11615 |
| 9 | 11 | திரு.எம்.பாலசுப்பிரமணியம் | 10060 | 11569 |
| 10 | 12 | திரு.பிரபாகரன் | 10020 | 11523 |
| 11 | 13 | திரு.துரைசாமி | 10100 | 11615 |
| 12 | 14 | திரு.வினோத் | 10050 | 11557 |

மேற்படி ஏலத்தாரர்களுக்கு 01.08.2025 முதல் 31.07.2028 வரை இரண்டாம் மூன்றாண்டு காலத்தொகுப்பிற்கு கடையை புதுப்பித்து வழங்கவும், தற்போது செலுத்தி வரும் வாடகைத் தொகையிலிருந்து 15% உயர்வு செய்து 01.08.2025 முதல் வாடகைத் தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

<u>தீர்மானம் எண்.993</u>

மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

**பொருள் எண்.27**

கருமத்தம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஏலம் போகாத கடைகள் மற்றும் குத்தகை இனங்களுக்கான பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 14.08.2025 அன்று தினமலர் மற்றும் தினத்தந்தி ஆகிய இரு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக் கட்டணமாக ரூ.49,266/- ஐ வழங்க கோரி Graphic Arts Industries அவர்கள் பட்டியல் வழங்கியுள்ளார். எனவே, மேற்படி தொகையை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.994</u>**

**மன்றம் அனுமதி வழங்குகிறது.**

**பொருள் எண்.28**

கருமத்தம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தைக்கு முன்புறமுள்ள புதிய வணிக வளாக கடைஎண் 08 முதல் 15 வரை உள்ள கடைகளின் மேற்கூரை அமைப்பதற்கு, கடைகள் மார்ச் 2025 ஆம் மாதம் தற்காலிகமாக காலிசெய்யப்பட்டது. தற்போது மேற்படி கடைகளின் பராமரிப்பு பணிகள் ஆகஸ்ட் 2025 ஆம் மாதம் முடிவுற்றது. மேற்படி கடைகளுக்கான மாத வாடகைத் தொகையை மார்ச் 2025 முதல் ஆகஸ்ட் 2025 வரை கணினியிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>(ந.க.எண்.214/2022/அ1)</u>

<u>அலுவலக குறிப்பு</u>

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.995</u>**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.29**

கருமத்தம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான சோமனூரில் அமைந்துள்ள வாரச்சந்தையில் சுங்கம் வசூலிப்பதற்கான சுங்க வசூல் கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>சோமனூர் வாரச்சந்தையில் வசூல் செய்ய வேண்டிய கட்டண விவரம்</u>

| வரிசை எண் | கட்டண இனங்கள் | கட்டண விவரம் (ரூ.பை) |
|---|---|---|
| 1 | கடை ஒன்றுக்கு (1சதுரடிக்கு) | 3 |
| 2 | பாரம் ஏற்றிய டிராக்டர், டெம்போ, வாகனம் உள்ளே செல்ல ஒவ்வொரு தடவைக்கும் | 300 |

| | | |
|---|---|---|
| 3 | பாரம் ஏற்றாத டிராக்டர், டெம்போ, வாகனம் உள்ளே செல்ல ஒவ்வொரு தடவைக்கும் | 200 |
| 4 | பாரம் ஏற்றிய மோட்டர் லாரி மற்றும் 12 சக்கர டிராக்டர் உள்ளே செல்ல ஒவ்வொரு தடவைக்கும் | 400 |
| 5 | பாரம் ஏற்றாத மோட்டர் லாரி மற்றும் 12 சக்கர டிராக்டர் உள்ளே செல்ல ஒவ்வொரு தடவைக்கும் | 200 |
| 6 | பாரம் ஏற்றிய மூன்று சக்கர மினி டெம்போ மற்றும் ஆட்டோ ரிக்ஷா உள்ளே செல்ல ஒவ்வொரு தடவைக்கும் | 180 |
| 7 | பாரம் ஏற்றாத மூன்று சக்கர மினி டெம்போ மற்றும் ஆட்டோ ரிக்ஷா உள்ளே செல்ல ஒவ்வொரு தடவைக்கும் | 80 |
| 8 | கை வண்டியில் வரும் மூட்டை ஒன்றுக்கு | 30 |
| 9 | பாரம் ஏற்றிய மற்றும் பாரம் ஏற்றாத இரு சக்கர வண்டி உள்ளே செல்ல ஒவ்வொரு தடவைக்கும் | 25 |
| 10 | தலைச்சுமைகள் மற்றும் இரு சக்கர வாகன விற்பனைகளுக்கு | 30 |

(ந.க.எண்.214/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.996**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.30**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 சாய்நகரில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார், இரும்பு குழாய்கள், கேபிள் மற்றும் ஸ்டாட்டர் பழுதடைந்துள்ளதை சரிசெய்யும் பணியை மேற்கொண்டதற்கான செலவினம் ரூ.2.80 இலட்சம் ஆகும். மேற்படி பணியை பொதுமக்கள் நலன் மற்றும் குடிநீர் அத்தியாவசிய அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.997**

**மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.**

**ஆணையாளர்**

**கருமத்தம்பட்டி நகராட்சி**